தொட்டியம் ஒன்றியம், கொளக்குடி ஊராட்சி
ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திருமதி க. மாணிக்கவள்ளி M.Com., PGDCM

ந.க/கொ/11-2024-25 நாள்: 13.07.2024

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியம் - கொளக்குடி ஊராட்சி - கிராம சர்வே எண்கள். 567/1,2,3,4B1&4B2A-ல் 9.80 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடல் தொடர்பாக.

பார்வை: 1 அரசாணை (நிலை) எண் 79 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்:04.05.2017
2 திருச்சி மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் ந.க.எண். TRY/SWP/UHT2YN5N /23821/2024/ TCP நாள்:22.04.2024
3 கொளக்குடி ஊராட்சி மன்ற தீர்மான எண்.324/2024-2025 நாள்: 21.06.2024
4 சார்பதிவாளர் 1 பத்திரம்

உத்தரவு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், கொளக்குடி கிராம ஊராட்சி கிராம சர்வே எண்கள். 567/1,2,3,4B1&4B2A-ல் 9.80 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவுக்கு ஒப்புதல் கோரி தோகை முருகன் விளம்பரதாரர் திரு. ஜே. சதீஸ்குமார் என்பவர் 15.03.2024-ல் நகர ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. பார்வை 2-ல் காணும் திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் ந.க.எண்: TRY/SWP/UHT2YN5N /23821/2024/TCP நாள் : 22.04.2024 மேற்படி இடத்தில் அமையும் வரைபடத்திற்கு உரிய நிபந்தனைகளுடன் ம.வ/ந.ஊ.இ.இ. (திமா) எண்: 92/2024 என எண்ணிடப்பட்டு இறுதி மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டது. பார்வை 3-ல் காணும் விவரப்படி இம்மனைப்பிரிவினை அங்கீகரித்து கொளக்குடி கிராம ஊராட்சி மன்ற தீர்மான

எண்:324/2024-2025 நாள்: 21.06.2024-ன்படி தீர்மானம் இயற்றப்பட்டது.

மேற்படி நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தின்படி தெரிவித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக மனுதாரர் மனை அளவுகளை பிரித்தும், சாலைகள் அமைத்தும், சாக்கடைகள் கட்டியும், அடிப்படை வசதிகளை மேற்கொண்டுள்ளார். மேலும் நிபந்தனையின அடிப்படையில் மொத்த மனைப்பிரிவில் சந்தை மதிப்புத் தொகையில் 3% விழுக்காடு தொகை ரூ.147007/- மற்றும் மனைக்கட்டணம் தொகை ரூ.175000/- ஆக கூடுதல் தொகை ரூ. 322007/- பல்வகை (Online) ரசீது எண்.2024-2025/16/11/25/7/6 நாள்: 13.07.2024-ல் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டது. மேலும் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டிய மனைப்பிரிவு, சாலை, பொது இடம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான இடம் ஆகியவற்றை பார்வை 4-ல் காணும் ஆவணம் மூலம் ஊராட்சிக்கு தானாமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையிலும் நகர் ஊரமைப்புதுறை இயக்குநர் அவர்களது இறுதி ஒப்புதல் அடிப்படையிலும் நிபந்தனைக்கு ஏதேனும் விடுப்பட்டு இருப்பின் அதனை நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் கொளக்குடி கிராம ஊராட்சி சர்வே எண். 567/1,2,3,4B1&4B2A-ல் 9.80 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனைபிரிவுக்கு ஊராட்சி மன்றம் மூலம் ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

தலைவர்
கொளக்குடி ஊராட்சி

பெறுதல்

தோகை முருகன் விளம்பரதாரர்கள்
நிர்வாக பங்குதாரர் திரு.ஜே. சதீஷ்குமார்
எண்.18 கடைவீதி செம்படபாளையம்
புஞ்சைபுகழூர், புகழூர் வட்டம்
திருச்சராப்பள்ளி மாவட்டம்

நகல்

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு, திருச்சி மாவட்டம்